26—

அடக்கஸ்தலம்

***4376—திரு. கே.எஸ். சரவணக்குமார்:**

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதி, பெரியகுளத்தில் இஸ்லாமியர்களுக்கு அடக்கஸ்தலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிறுபான்மையினருக்குக் கல்லறைத் தோட்டம், அடக்கஸ்தலம் அமைக்க, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வாயிலாக அரசு புறம்போக்கு இடங்களில் நிலம் வழங்கப்பட்டு வருகிறது. அரசு புறம்போக்கு நிலம் இல்லாத பகுதிகளில், தனியார் நிலங்களை விலைக்கு வாங்கும்பட்சத்தில், இதற்கென அரசின் பங்களிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கோடி ரூபாயை வழங்கியுள்ளார்கள். 9–1–2024 அன்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், மக்கள் முதல்வர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கிறித்துவர்களுக்கான கல்லறைத் தோட்டங்கள், இஸ்லாமியர்களுக்கான கபர்ஸ்தான் இல்லாத மாவட்டத் தலைநகரங்களில் நிலம் கையகப்படுத்தப்பட்டு, மாநகராட்சி/நகராட்சி சார்பில் கல்லறைத் தோட்டம், கபர்ஸ்தான் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்ததன் அடிப்படையில், அதற்கான தொகையாக 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணையிட்டுள்ளார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளபடி, தேனி மாவட்டம், பெரியகுளத்தில் அரசு புறம்போக்கு நிலம் இருக்கும்பட்சத்தில், அந்த இடத்தில் நிலம் வழங்குவதற்கோ, நிலம் இல்லாதபட்சத்தில்,

2024 பிப்ரவரி 15]
இந்த நிதியில் பங்களிப்புடன் தனியார் நிலத்திலோ இஸ்லாமியர்களுக்கு கபர்ஸ்தான் அமைத்துத் தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். சரவணக்குமார் அவர்கள்.*

திரு. கே.எஸ். சரவணக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். பெரியகுளம் தொகுதிக்குட்பட்ட மாவட்டத் தலைநகரான தேனியும், தேனியைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கணிசமாக இஸ்லாமியப் பெருமக்கள் வசித்து வருகின்றனர். அவர்களுக்கு விழாக் காலங்கள், பெருநாள் தொழுகையான ரம்ஜான், பக்ரீத் போன்ற பண்டிகை நாட்களில் தொழுகை நடத்துவதற்கென்று தனியாக இடம் இல்லை. எனவே, அனைவரும் இணைந்து தொழுகை நடத்துவதற்கென தனியாக ஈத்கா மைதானம் அமைக்க அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இஸ்லாமியர்களுக்கு கபர்ஸ்தான் அமைக்க காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், சாலமங்கலம் கிராமத்தில் புல எண் 105–ல் ஒன்றே முக்கால் ஹெக்டேர் நிலமும், ருத்ரபூமி வகைப்பட்ட நிலத்தில் 2 ஹெக்டேர் நிலமும் மாண்புமிகு அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள் உதவியோடு வழங்கப்பட்டிருக்கிறது. புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், பெருங்குடி கிராமத்தில் புல எண் 9/1–ல் ஒரு ஹெக்டேர் நிலம் மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. ரகுபதி அவர்களின் உதவியோடு வழங்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாநகராட்சி, கவுண்டம்பாளையம், சங்கனூர் கிராமத்தில் 2 ஏக்கர் நிலம் மாண்புமிகு பொறுப்பு அமைச்சர் அண்ணன் திரு. முத்துசாமி அவர்களின் உதவியுடன் இஸ்லாமியர்களுக்கு கபர்ஸ்தான் அமைக்க வழங்கப்பட்டுள்ளது.*

[2024 பிப்ரவரி 15

முற்பகல் 10–45

அதைப்போல, கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை நகராட்சிக்குட்பட்ட பத்மநாபபுரம் கிராமம், புல எண் A–5/14–ல் உள்ள 40.77 சென்ட் நிலத்தில் கபர்ஸ்தான் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, மாண்புமிகு அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் அவர்களின் உதவியோடு செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை மாநகராட்சி மண்டலம் 1, சாத்தாங்காடு கிராமம், வார்டு எண் 7–ல் உள்ள 5 ஏக்கர் நிலத்தை கபர்ஸ்தான் அமைக்க முறைப்படி நில மாற்றம் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மாண்புமிகு அமைச்சர் திரு. சேகர்பாபு அவர்களின் உதவியோடு நடைபெற்று வருகிறது. இதைப்போல, கிறித்துவர்களுக்கு விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் வட்டம், மேல்மலையனூர் கிராமத்தில் புல எண்கள் 319/1, 319/5 ஆகியவற்றில் 1.9 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. நாகப்பட்டினத்தில் வார்டு எண் 2, பிளாக் எண் 27–ல் அரசு புறம்போக்கு நிலம் 2,250 சதுர மீட்டர் மாண்புமிகு பொறுப்பு அமைச்சர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியில் அவர் ஊருக்குக் கேட்டிருக்கிறார். நீங்கள் கொடுக்கிறீர்களா, கொடுக்கவில்லையா என்று சொல்லுங்கள். தமிழ்நாடு முழுவதும் நீங்கள் வாசிக்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: இதைப்போல வழங்கப்பட்டு வருகின்ற நிலையில். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், அவர்களுக்குக் கொடுப்பதற்கு வாய்ப்பிருக்கிறதா என்பதற்கு மட்டும் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருப்பதிலே தேனி மாவட்டம், அல்லிநகரம் கிராமத்தில் புல எண் 1764–ல் 4,400 சதுர மீட்டர் நிலம் கிறித்துவ மற்றும் முஸ்லிம் சிறுபான்மையின மக்களுக்கு மயானம் அமைக்க வழங்கப்பட மாண்புமிகு அமைச்சர் திரு. பெரியசாமி அவர்களின் உதவியோடு நடவடிக்கையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைப்போல, பல்வேறு இடங்களில் அந்த இடம் தேவைப்படும் சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தந்த

2024 பிப்ரவரி 15]

மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய கவனத்திற்கு எடுத்து வர வேண்டும். தனியார் இடத்தை விலைபேசி வாங்க, அரசினுடைய பங்களிப்பை அளிக்க அரசாங்கம் முன்வரவுள்ள நிலையில் இதைச் சரியான முறையில் நீங்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இதன் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். சரவணக்குமார் அவர்கள்.*

திரு. கே.எஸ். சரவணக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொது மயானம் அமைப்பதற்கு எவ்வாறு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியைப் பயன்படுத்துகிறோமோ அதேபோல, இஸ்லாமியப் பெருமக்கள் அடக்கஸ்தலங்களுக்கு அடிப்படைப் பணிகளை மேற்கொள்வதற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியைப் பயன்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினருடைய அந்தக் கோரிக்கையை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறேன். அதை உரிய நேரத்தில் பரிசீலனை செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு செயல்படுத்துவோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கே. கலைவாணன், மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள்.*